

# சீக்கிரமேவ
# சுபமுகூர்த்த விவாஹப்
# ப்ராப்திரஸ்து



**Presented by**

**www.BrahminsForSociety.com**

## அறிமுகம் : -

நீங்கள் உங்கள் மகனுக்கு வரன் தேடும் பெற்றோராக இருக்கலாம். அல்லது உங்கள் மணவாழ்க்கைக்கு மணப்பெண் தேடும் இளைஞராக இருக்கலாம். அல்லது நமது குலம்பற்றி அக்கறையுள்ள சமூக சிந்தனையுள்ள மனிதராக இருக்கலாம். இதன் காரணமாக இந்தப் புத்தகம் உங்களுக்கு அனுப்பபடுகிறது.

இன்றைய தலைமுறையின் நமக்குள்ள மிக முக்கியமான சவால் நமது இளைஞர்களுக்கு முறைப்படி திருமணம் செய்து வைத்தலே ஆகும். வரன் கிடைக்காமல் திருமணமாகாத இளைஞர்களின் எண்ணிக்கை 75,000 முதல் 1,00,000 வரை இருக்கக்கூடும்.

இந்த பிரச்சனை நாம் எண்ணியதைவிட பிரம்மாண்டமாக வளர்ந்து நம் குலத்தின் இருப்பையே அடுத்த 20 வருடங்களில் கேள்விக்குரியதாக்கும். இந்த கையேடு பிரச்சனையின் தீவிரத்தை நமது குலத்தவருக்கு பரப்புதல் மற்றும் இதே சூழ்நிலையை சந்தித்தவர்கள் அதை கையாண்ட விதத்தை விளக்குதல் என தீர்வை நோக்கிய செயலின் முதற்படியாகும்.

நமது ஆச்சாரியர்களான சங்கரர், ராமானுஜர், மத்வர் ஆகியோரின் ஆசிகளை வேண்டி இந்த கையேட்டை BrahminsForSociety.com சார்பில் வெளியிடுகிறோம். தங்கள் கவனம் முழுவதையும் இந்த புத்தகத்தில் விவாதித்த பிரச்சனையில் செலுத்தும்படி வேண்டுகிறோம்.

## நமது பாரம்பரிய நம்பிக்கைகள் :

க்ருகஸ்தனே ( திருமணமானவனே) இந்த சமூகத்தின் ஆதாரமானவன், மற்ற தர்மங்களை (பிரம்மச்சரிய, சன்யாச) கிரகஸ்தனே தாங்குகிறான். க்ருகஸ்தனே சமூகத்தை/குலத்தைக் காப்பவனாகிறான். ஆனால் நமது இளைஞர்களுக்கு வரன் கிடைத்து திருமணமாவது மிக கடினமான காரியம் என்ற நிலை இன்று இருக்கிறது.

## நிஜம் :- கசக்கும் நிஜம்

நமது குலத்தவருக்கான ஜாதகமேளா, ஒரு பார்வை :.

| தேதி | இடம் | ஆண் | பெண் |
|---|---|---|---|
| மே 15 | நங்கநல்லூர், சென்னை | 175 | 04 |
| ஜீன் 15 | கோவை | 30 | 01 |
| ஆக 16 | அம்பத்தூர், சென்னை | 73 | 06 |
| ஆக 16 | ஆவடி, சென்னை | 14 | 02 |

* ஆதாரம் **ABBA** ஜாதகமேளா

நமது குலத்தோருக்கான ஜாதக பரிவர்த்தனை நிலையங்கள்/ website-களும் பெண்களுக்கு இலவசம் என்று அறிவிக்கின்றன. ஆனாலும் பெண்கள் ஜாதகம் 20% சதவீதம் என்ற நிலையைத் தாண்டுவதில்லை. நமது குலத்தின் ஆண், பெண் ratio மிகமிக மோசமான சரிவில் இருக்கிறது.

**ஜாதக மேளாவில் சில காட்சிகள் :**

1. எங்கள் மகன் மார்கெட்டிங் மேனேஜர் வயது 30, சம்பளம் ரூ.30,000/- நாங்கள் வசதி குறைந்த பெண்ணை மருமகளாக்க விரும்புகிறோம்.

2. எங்களுக்கு எந்த எதிர்ப்பார்ப்பும் இல்லை. என் மகனுக்கு வயது 32.

3. என் மகனுக்கு வயது 29, சம்பளம் ரூ.25000/- படித்த, அழகான, வேலை பார்க்கும் பெண் தேவை.

இவை பெற்றோரின் விருப்பங்கள்; பெரும் பாலோர் நமது சமூகத்தில் நடப்பது என்ன என்றே தெரியாமல் இருக்கிறார்கள். அவர்களின் சிந்தனை 80-களில் உறைந்து போய்விட்டது. அவர்கள் எதிர்பார்ப்பு 80-களில் பேசப்பட்டவையாக இருக்கின்றன.

ஏதாவது அதிசயம் நடந்து தன் பிள்ளைகளுக்குத் திருமணம் நடக்கும் என்று நம்புகிறார்கள். உண்மையில் 20% - 30% சதவீத இளைஞர்களுக்கு மட்டுமே திருமணம் ஆகும் என்ற நிலை பலருக்கும் உறைக்கவில்லை.

**அந்த பெற்றோர்களில் சில வகையினர். :**

1. தன் பிள்ளைகளின் வாழ்க்கையைப் பற்றிய பெரும் கவலை. அதற்காக பெரும் பிரயத்தனம் செய்பவர்கள்.

2. நம்மால் முடிந்ததை செய்வோம். அவனுக்கு என்ன பிராப்தமோ அது நடக்கட்டும். (மூடநிலை Apply the same medicine until the patient die)

3. பெண்ணே கிடைக்கவில்லை. நாம் என்ன செய்ய முடியும். (விரக்தி நிலை)

4. ஆம்பிளை பையன் தானே! பரவாயில்லை. (விபரீதநிலை - திருமணம் ஆகாத இளைஞனின் பெற்றோர்க்கு தன் ரிட்டயர்மண்ட் வாழ்க்கை பற்றிய கவலையில்லை).

**பிரச்சனையின் சில காரணங்கள் :**

"அம்மா இப்ப என் கல்யாணத்துக்கு என்ன அவசரம் (வயது 27) நான் Project Leader ஆன உடன் பண்ணிக்கிறேன்"( Project தலைவனாக எப்போது வேண்டுமானாலும் ஆகலாம். ஆனால் வயதை விட்டால் குடும்பத் தலைவனாக ஆகவே முடியாது)

"போதும்! போதும்!! இன்னொரு குழந்தையை யாரு பார்த்துக்கிறது. ஓண்ணே போதும்". (சமூகம் பாதியாகி கரைந்தே போனது)

"5 வருஷமாதான் என் பொண்ணு வேலைக்கு போறா. இப்போ என்ன அவசரம்? இன்னும் கொஞ்ச நாள் ஆகட்டும்" (ஒரே பெண், வாழ்வின் ஆதாரம்: அவர்கள் காத்திருக்கிறார்கள், ஏதோ நடக்க!)

"ஆஸ்ரேலியா வேண்டாம்! மாப்பிள்ளை அமெரிக்காவின் இருக்கணும்". (அமெரிக்காவில் இந்த பின்கோட்டில் வசிக்கணும் என்று கூட கேட்கலாம்)

"இப்பதானே பையனுக்கு 29 ஆகிறது. அடுத்த வருஷம் ஜாதகத்தை எடுக்கணும்" (30+ ல் ஜாதகம் எடுத்தால் என்ன எடுக்காவிட்டால் என்ன?)

“7 பொருத்தம் தான் இருக்கு 10ம் வேணும் அப்பதான் பையன் நல்லா இருப்பான்”. (ஜாதகக்காரன் ஸ்ரீராம பக்தராக அல்ல! ஆஞ்சநேய பக்தராக மட்டும் இருக்கலாம்).

பெற்றோர்கள் நெருப்பில் பாயும் விட்டில் பூச்சிகளின் மனநிலையில் இருக்கிறார்கள். மிக புத்திசாலி என சொல்லிக் கொள்கின்ற சமூகத்தின் கையறு நிலை.

## நமது முன் உள்ள சவால் :

50% சதவீத தம்பதியினர் ஒரு குழந்தையோடு நிறுத்துகிறார்கள். மூன்றாவது குழந்தையைக் கண்டதேயில்லை.

7-ல் ஒரு குடும்பம் தமிழ்நாட்டை விட்டு வெளியேறி அடையாளம் இழக்கிறது.

5- ல் மூன்று இளைஞர்களுக்கு திருமணம் ஆக போவதில்லை. திருமண வயது 21 லிருந்து 30தை தாண்டி போய்க் கொண்டிருக்கிறது.

நமது இன்றைய தலையாய பிரச்சனை நம் அடையாளத்தை உயிருடன் வைப்பதே, அழியாமல் காப்பதே.

ஆனால் நமது கவனம் இன்னும்ம் இடஓதுக்கீடுக்கு எதிராக பேசுவதில் இருக்கிறது. தமிழக அரசு வேலைக்கு மனுபோடும் இளைஞனைக் கண்டதுண்டா? இன்றைய சமூக சூழ்நிலையை புரிந்து கொண்டு நமது இளைஞர்கள் அரசு வேலையில் இருந்து விலகியிருக்கிறார்கள். நமது இளைய தலைமுறைக்கு தேவை அரசு வேலையில்லை,

தேவை வாழ்க்கை. நாம் நம்மை சுற்றிவரும் ஆபத்தின் தீவிரம் அறியாமல் இன்னமும் 1980-1990 களின் வாழ்ந்துக் கொண்டுயிருக்கிறோமோ என்ற சந்தேகம் வருகிறது.

## நமது மதிப்பிற்குரிய குலப்பெரியவர்களுக்கு : -

நாம் சுருங்கி கொண்டியிருக்கிறோம். மெதுவாக அழித்துக் கொண்டியிருக்கிறோம். திருமணம் ஆகாமல் போகும் இளைஞன் நமது கலாச்சாரத்தின்/ அடையாளத்தின் கடைசி பக்கங்களை எழுதுகிறான்.

விளக்கு பூஜையும், சமஷ்டி உபநயனமும், பீமரத சாந்தியும், பஜனை மண்டலிகள் நடத்தட்டும். இவற்றில் நமது குலத்தின் பெரியவர்கள் அவர்களின் நேரமும், பணத்தையும், மற்றும் உழைப்பையும் செலவழிப்பது சரியானதா என்பதை யோசிக்கும் நேரம் இது! சாலை விபத்தில் மோசமாக அடிபட்டு உயிருக்கு போராடுபவனின் ரத்தப்போக்கை நிறுத்தாமல் அவனுக்கு ஜூஸ் கொடுப்பது எந்த வகையில் பயன்தரும்.

## கற்றுக் கொள்வோம்! மற்றவர்களின் அனுபவத்திலிருந்து !

1. நாஜபாளயத்தை சேர்ந்த குலத்தவர்கள். இதே மணப்பெண் பிரச்சனை. மகாசபை கூடியது. ஆந்திராவிலிந்து பெண் எடுக்க தீர்மானம் போட்டார்கள், செயல்படுத்தினார்கள்.

2. அடுத்ததாக தமிழ்நாட்டில் பரவலாக இருக்க கூடிய இன்னுமொரு சமூகம். நம்மை போன்றே அவர்கள் உணவு பழக்கம் மற்றும் பாரம்பரியத்தின் மீது தீவிர ஈடுபாடுக்கொண்டவர்கள். நம்மை போலவே திருமணங்களில் கடும் சிக்கலை சந்திக்கிறார்கள். அவர்களின் குலப்பெரியவர்கள் கவலையுடன் முன்முயற்சி எடுக்கிறார்கள்.

3. கர்நாடக பிராமணர் இதே பிரச்சனையை சந்திக்கிறார்கள். மத்திய அமைச்சர் ஆனந்த குமார் தலைமையில் கூடி ஆலோசனை செய்தார்கள். ஆச்சாரியர்கள், சங்கங்கள், குலபெரியவர்கள் கலந்து கொண்டார்கள்.

**அவர்கள் முன் இருந்த தீர்வுகள் இரண்டு :**

1. கர்நாடகாவில் பிராமணர்களை போலவே உணவு பழக்கம், ஆச்சாரியரிடம் கட்டுப்பட்டு நடப்பது. நமது பாரம்பரிய நம்பிக்கைகளுடன் ஒத்துப்போகும் பிற குலத்தவருடன் இணைவது.

( ஆனால் சைவ உணவு பழக்கம் உள்ள குலங்கள் ஒரு குழந்தை மற்றும் மணப்பெண் இல்லாதப் பிரச்சனையில் சிக்கி தவிக்கின்றன. அதனால் இந்த யோசனை கைவிடப்பட்டது).

2. பிற மாநிலத்தை சேர்ந்த பிராமணப் பெண்களைத் திருமணம் செய்துக் கொள்ளுதல்.

அந்த கூட்டத்தில் மக்கள் தொகைப்பற்றிய கீழ்வரும் அட்டவணை அலசப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| **Andra Pradesh** | **1** | **Jammu & Kashmir** | **11** |
| **Arunachal Pradesh** | **6** | **Jharkhand** | **3** |
| **Assam** | **4** | **Karnataka** | **5** |
| **Bihar** | **5** | **Kerala** | **1** |
| **Chhattisgarh** | **2** | **Punjab** | **5** |
| **Madhya Pradesh** | **5** | **Rajasthan** | **7** |
| **Maharashtra** | **4** | **Sikkim** | **5** |
| **Orissa** | **9** | **Tamilnadu** | **2** |
| **Delhi** | **12** | **Tripura** | **3** |
| **Goa** | **7** | **Uttar Pradesh** | **10** |
| **Gujarat** | **5** | **Uttarakhand** | **20** |
| **Haryana** | **6** | **West Bengal** | **5** |
| **Himachal Pradesh** | **14** | **Figures in percent** | |

தீர்வாக தெரிந்தது உத்திரபிரதேசம். பெரிய மாநிலம். மிக பெரிய மக்கள் தொகை. ஒரு கோடியே இருபது இலட்சம் பிராமணர்கள் வசிக்கும் இடம். தென்னாட்டு பிராமணர்கள் போல அவர்கள் கல்வியில், பொருளாதாரரீதியில் பெரிய முன்னேற்றம் கண்டவர்கள் இல்லை.

ஆனால் நமது வேதங்களை, கலாச்சாரத்தை நம்மை விட அதிகம் போற்றுபவர்கள். மொழிரீதியாக சில

பிரச்சனைகளை திருமண உறவுகள் சந்திக்கலாம். ஆனால் மிக அதிகம் படிக்காத பெண்கள், **“இராமன் இருக்குமிடமே அயோத்தி”** என்று நம்பும் பெண்கள் தங்கள் புதுயிட கலச்சாரத்தை, மொழியை தமதாக்கிக் கொள்வார்கள். அழிந்து போவதைவிட சில சமரசங்களுடன் வாழ்வதே சிறந்தது என முடிவுயெடுத்தார்கள். கர்நாடக பிராமண சங்கங்கள், ஆச்சாரியர்கள், குலப்பெரியவர்கள் இணைந்து உத்திரபிரதேசத்திலிருந்து பெண்ணை எடுக்க முடிவெடுத்து, அதை செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

## இளைஞனே! உனக்கொரு வார்த்தை

உன்னை சுற்றி நடப்பவற்றை பார்! நாற்பது வயதுக்கு கீழே பிராமண குலத்தில் .....

I.A.S இல்லை! I.P.S இல்லை! அரசு அலுவலர்கள் இல்லை! ஆசிரியர்கள் இல்லை! நீதிபதிகள் இல்லை! தமிழ் அறிஞர்கள் இல்லை! எழுத்தாளர்கள் இல்லை! கவிஞர்கள் இல்லை! M.L.A இல்லை! M.P. இல்லை! கவுன்சிலர்கள் இல்லை! மாவட்ட செயலாளர்கள் இல்லை! வட்ட செயலாளர் இல்லை! டாக்டர்கள் இல்லை! சமூக தளங்களில் கு றி ப் பி ட த் த க் க பங்களிப்பை அளித்த நமது சமூகம் இப்போது TECH கூலிகளாக சுருங்கிப்போனது. இன்று கடும் வறுமையை சமாளித்துவிட்டோம். ஆனால் இருப்பைத் தொலைத்துக் கொண்டியிருக்கிறோம். இந்த குருவிக் கூட்டம் கடும் நெருக்கடியில் இருக்கின்றது.

இன்றைய தேதியில் நம்முன் உள்ள மிகப்பெரிய சவால் திருமணம் ஆகாத இளைஞர்களுக்கு பெண் தேடுவதுதான். கீழ்வரும் அட்டவணை உனக்கு நிஜத்தை உரைக்கட்டும்.

**திருமணமாகும் வாய்ப்பு – ஒரு பார்வை :**

| வயது | தகுதி | திருமணமாகும் வாய்ப்பு % |
|---|---|---|
| 25-26 | Software/ Auditor/Hr Exec/ High PRO | 70- 80% |
| 27-30 | - DO - | 50% |
| 30-32 | Any High profile Job | 20 - 30% |
| 33 + | Any one | Sorry |
| Any age | Non Professional Jobs | 10 - 20% |

இதில் நீ எங்கிருக்கிறாய் என்பதை யோசி. சுயதொழில் செய்பவர்கள், வைதீகத்தில் இருப்பவர்கள், சமையல் தொழில் செய்பவர்கள் மற்றும் சிறுவேலைகளில் இருப்பவர்கள் அனைவருக்கும் திருமணம் ஆவதில்லை. திருமண வயது சிறிது தாண்டிப் போனாலும் திருமணம் ஆகப்போவது இல்லை.

உன் திருமணத்துக்கு பெண் தேடுவது மிகமிக கடினமான செயல் அந்த பெரும் பாரத்தை இன்னமும் 1990 களின் மன நிலையிருக்கும் உன் பெற்றோர்கள் தாங்க முடியுமா என யோசி.

உன்னுடைய 50-வயதுக் கடந்த நிலையில் கேட்க ஒருவரும் இன்றி தனிமையின் சுமையுடன் இருக்க போகிறாயா அல்லது ஒரு குடும்பஸ்தனாக வாழ போகிறாயா என்பதை நீ எடுக்கும் முடிவே தீர்மானிக்கும்.

அசடுகளுக்கு இன்றைய உலகில் இடமில்லை. உன் வாழ்க்கையை அமைத்துக் கொள்வது உனக்கான மட்டுமல்ல, 5,000 ஆண்டு பாரம்பரியம் கொண்ட ஒரு சமூகத்தை அழிவிலிருந்து காப்பாற்றுவதற்கும் தான்.

இந்த கையேட்டை படித்தவுடன் யோசி. கர்நாடக பிராமணர்கள் எடுத்த முடிவுப்பற்றி யோசி. உன் பெற்றோருடனும், நண்பர்களுடன், குடும்ப பெரியவர்களுடனும் பேசு. உன் திருமணம் பற்றி பேச சங்கோஜப்படுவது முட்டாள்தனம் இல்லையா? உன் தாய் தந்தையற்கு மகன் வயிற்றுப் பேரப்பிள்ளைகளுடன் கொஞ்சி விளையாட ஆசையிருக்காதா? நீ அவர்களுடன் உரையாடுவதன் மூலம் அவர்கள் உனக்கு நல்ல வழிகாட்ட முடியும்.

வெளிமாநில பெண்ணை, அதுவும் மொழித் தெரியாத பெண்ணை திருமணம் செய்து கொள்வது நமக்கு சரிப்பட்டுவருமா என யோசிக்கிறாயா? எவ்வித சமரசங்கள்

செய்து கொள்ள வேண்டுமோ என கவலை கொள்கிறாயா?

உப்பிட்டுகூட சமைக்க தெரியாத பெண்ணை திருமணம் செய்துக்கொள்ள "இனி உப்பிட்டே உண்பதில்லை" என சமரசம் செய்து கொண்ட ஒப்பிலியப்பன் கதை தெரியாதா? தன் அண்ணனின் துணையுடன் மாறுவேடத்தில் வந்து மணம்புரிந்த சுப்பிரமணிய சுவாமி கதை தெரியாதா? இவை நமது மூதாதையரின் நம்பிக்கைகள். சிக்கலான தருணங்களின் முடிவெடுக்கப்பயன்படும் கருவிகள்தான் நம் புராணக்கதைகள்.

**செயல்படு!** பெற்றோர் மற்றும் தொழில் நுட்பத்தின் (web) உதவியுடன் உன் துணையைத் தேடு. அமைதியான பண்பான வாழ்க்கைக்கு பெரும் பணமும், பெரும்படிப்பும் தேவையில்லை. நீ தேர்ந்தெடுக்கும் பெண் நமது குடும்பத்திற்கு ஏற்றவளாக, நமது கலாச்சாரத்தையும் மதிப்பவளாக, உனது பெற்றோரை மதிப்பவளாக இருக்கட்டும்

உன் திருமணம் இது! உன் செலவில் நடக்கட்டும். தன்மானம் உள்ள இளைஞனாக நிமர்ந்துநில். உன்னை நம்பி சொந்த ஊரைவிட்டு வரும் பெண்ணை மகிழ்ச்சியாக வாழ வைத்து நம் குலமானத்தைக் காப்பாற்று.

இந்த கையேடு உன்மீது அக்கறையால் வெளியிடப்படுகிறது. இதை படித்துவிட்டு உதாசீனப் படுத்தலாம் அல்லது செயல்படலாம், வாழ்க்கையை வாழ்ந்து பார்க்கலாம்.

நமது Website – ஆல் உடனடி தீர்வுகளை உன் கையில்

தந்து விட முடியாது. ஆனால் தீர்வுகளை நோக்கிய திசையைக்காட்டும். பயணத்தை ஆரம்பிப்பது நீயாகவே மட்டுமே இருக்க முடியும். வாழ்க்கையை வாழ்ந்த அனுபவ கவிஞனின் வரிகள் இவை:

உனக்காக நான் அழலாம்.
இயற்கையில் நடக்கும்....
உனக்காக உணவு உண்ண எப்படி நடக்கும்?
நமக்கென்று பூமியிலே கடமைகள் உண்டு. அதை -
நமக்காக நம் கையால் செய்வது நன்று !

உன் பயணத்தை துவங்கு. நண்பனே! உடனடியாக துவங்கு.

நம்மிடையே ஒற்றுமை இல்லை. அதுவே அனைத்து பிரச்சனைகளுக்கும் காரணம் என புலம்புபவர்களை உடனடியாக தவிர்த்து விடு. ஆலமரங்கள் தோப்பாவதில்லை. தோப்பாவது அதன் இயல்புமில்லை. அவை தனிதனியாக செயல்பட்டு விழுதுகளுடன் வாழ்வாங்கு வாழும். நூற்றுகணக்கான பறவைகளுக்கு சரணாலயம் ஆகும். பலருக்கும் நிழல் தரும். இவையே அதன் இயல்பு. உனது திருமண பிரச்சனையை நம் சமூகமே ஒருங்கிணைந்து செயல்பட்டு தீர்க்க வேண்டும் என நீ எதிர்பார்த்தால் அது மூடதனம். நீ தனிமரமாக முயற்சி செய்து வென்றுபார்! நாட்டிற்கு பயனுள்ளவகை வாழ்ந்துபார்!

உன்வாழ்க்கை உன் முடிவில். விதியின் மீது பழிசுமத்தாதே. அந்த விதிபடியே இந்த கையேடு உன்னிடம் வந்தடைந்துள்ளது. நமது ஆச்சாரியர்களை வணங்கி செயல்படு. பாரம் பரியத்தையும், மொழியையும், குலத்தையும், நாட்டையும், காப்பாற்று.

# சீக்கிரமேவ சுபமுகூர்த்த விவாஹப் ப்ராப்திரஸ்து

**நமது வலைதளம் :**

தன் தியாகத்தால் நம் நாட்டையும் மொழியையும், பெருமை படுத்தியவர்களின் வாழ்க்கையை உரைக்கிறது! தானும் உயர்ந்து தன் நாட்டையும் உயர்த்திய தனி நபர்களின் வாழ்க்கையை விவரிக்கிறது. நம் குலத்தோரால் ஆரம்பிக்கப்பட்டு கோடிக்கணக்கானவர்களுக்குப் பலன்தரும் நிறுவனங்களின் வெற்றிக்கதையை சொல்கிறது. இவை நமது இளைஞர்களுக்கான உயர் நோக்கத்தை தருகிறது.

நம்முன் உள்ள சவால்களை அலசுகிறது. நமது இளைஞர்களுக்கு Career வழிக்காட்டுகிறது. நம் குலம் மீது வைக்கும் நியாயமான விமர்சனங்களை ஆராய்ந்து மாறுதல்களை பரிந்துரைக்கிறது. மற்றும் நியாயமில்லா விமர்சங்களுக்கு பதில் அளிக்கிறது.

நமது நாடு ஒரு பூந்தோட்டம். அதில் ஒவ்வொரு சமூகமும் ஒரு பூச்செடியாகும். எந்த செடியிலும் உயர்ந்ததோ அல்லது தாழ்ந்ததே ா இல்லை என மனமாற நம்புகிறது. பிராமணர்கள் மற்றவரை விட எவ்விதத்திலும் உயர்ந்தவரும் இல்லை, தாழ்ந்தவரும் இல்லை. அதே நேரத்தில் நாம் எந்தவொரு குலத்தைபோலவும் நமக்கும் நமது பாரம்பரியத்தை கடைபிடிக்கும் கடமையுள்ளது என்று நம்புகிறது.

எவராக இருந்தாலும் எம் தாய்நாட்டிற்கும், எம்

தாய்மொழிக்கும் பணி செய்தோரைத் தொழுகிறது. தாயகத்தின் நலனே நமது நலன் என நம்புகிறது.

**பணிவுடன்**

1. **www.BrahminsForSociety.com**

2. **உடனடி தேவைகள் (Make arranged marriage attractive ) :-**

3. திருமண செலவுகள் அத்தனையும் இரு சாராரும் சரிசமமாக ஏற்றல்.
4. ஒரு பெண் மட்டுமே உள்ள பெற்றோருக்கு பெண்ணின் சம்பளத்தில் உரிமை மற்றும் அவர்களைப் பாதுகாத்தல் பெண்ணின் கடமை.
5. திருமண வயது 35 அல்ல, 25 (ஆண்களுக்கு)
6. திருமணத்தை சொந்த ஊரில் குல தெய்வ கோயிலில் நடத்தவது. பின் reception- னை தகுதிக்கு ஏற்றபடி நடத்துவது.

குறைந்த செலவில் மண்டபங்களை அமைத்தல்
ல்நகரங்களில்) மற்றும்

**சுபம்**